**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. 166/2022 PW3**

17.09.2025 **வா.சா.3 மோகன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் தற்போது மும்பையில் வசித்து வருகிறேன். நான் சிறு வயதில் இருந்தே மும்பையில் தான் வசித்து வருகிறேன். எனக்கு ஆதார் அட்டை, குடும்ப அட்டை மும்பை முகவரியில் தான் உள்ளது. எனது தாத்தா பெயர் நீலன் கவுண்டர். அவருக்கு 3 மகன்கள். நான் நீலன் கவுண்டரின் முதல் மகனின் மகன் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவியின் மகன் தான் நான். என்னுடன் 1 அண்ணன், 1 தம்பி, 1 அக்கா உடன் பிறந்தவர்கள் ஆவார்கள். என்னுடன் பிறந்த 2 சகோதரர்களும் மும்பையில் தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். என்னுடைய அப்பாவின் 2வது மனைவி பாக்கியலட்சுமி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது எனது தாத்தா சம்பாதித்த சொத்தாகும். எனது தாத்தா தான் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார். எனது தாத்தா பாடலி என்ற நபரிடம் வழக்கு சொத்தை அடமானம் வைத்து பணம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும், 18.10.2005ல் எனது தாத்தா ராஜசேகர் என்பவரிடம் வழக்கு சொத்தை அடமானம் வைத்து பணம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கடன்களை என் தாத்தாவின் 3 மகன்கள் தான் திருப்பி அடைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அடமானங்களை பைசல் செய்யும் போது எனது அப்பா தான் மும்பையில் இருந்து வந்து என் தாத்தாவுடன் தங்கி பைசல் செய்தார் என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது தாத்தா எங்களுக்கு எழுதிக் கொடுத்த தானப்பத்திரத்தின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 2007ம் ஆண்டு அவ்வாறு தானப் பத்திரம் எழுதிக் கொடுத்தார், தேதி நியாபகம் இல்லை. மேற்படி தானப்பத்திரத்தை எனது தாத்தா பின்னிட்டு ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. எனது தாத்தா 02.11.2007ல் 22.10.2007 தேதியிட்ட மேற்படி தானப்பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. பிறகு எனது தாத்தா மேற்படி தான பத்திரத்தில் கண்ட சொத்தை ராஜகுமாரனுக்கும், சொர்ணலட்சுமிக்கும் மீண்டும் ஒரு தானப்பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. 28.12.2007ல் மேற்படி ராஜகுமாரனுக்கும், சொர்ணலட்சுமிக்கும் எழுதிக் கொடுத்த தானப்பத்திரத்தை ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. 03.01.2008ல் எனது தாத்தா இந்த வழக்கின் 3, 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்து சம்மந்தமாக மீண்டும் ஒரு தானப் பத்திரத்தை எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. 03.01.2008 தேதியிட்ட தானப் பத்திரம் படி 3, 4 பிரதிவாதிகள் இன்றளவும் தானப் பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குடியிருக்கும் நிலையில் இல்லை என்றும், இடிந்த நிலையில் உள்ளது என்றால்

சரியல்ல. வாதியுடன் சேர்ந்து நான் எந்த காலத்திலும் வழக்கு சொத்தை அனுபவித்ததே இல்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**/உண்மை நகல்/**

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.